# மத்தாப்பு



குதித்து வெளியே வந்தால் - மத்தாப்பு
படித்துக் கதை சொல்வாயாம்மா?

வாசகர்களுக்கு,

எமது வணக்கங்கள். முதலாவது மத்தாப்பு இதழைப் படித்துப் பாராட்டி ஊக்கம் தந்தவர்களுக்கும், அரிய ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் தந்து உதவியவர்களுக்கும் முதலில் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இந்த இரண்டாவது இதழை நீங்கள் தந்த ஆலோசனைகளை மனதில் கொண்டு, இயன்றளவு திருப்தி தரக் கூடிய முறையில் அமைத்திருக்கின்றோம். மேலும் சிறப்பாக அமைய உங்கள் விமர்சனங்களையும், ஆதரவையும் எதிர்பார்க்கின்றோம்.

சிறுவர்களுக்காக வெளியிடப்படும் இந்தச் சஞ்சிகையில் சிறுவர்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், சித்திரங்கள் மற்றும் ஆக்கங்களையும் தமிழில் பிரசுரிப்பதற்கு, பெற்றோர்களைக் குழந்தைகளுக்கு ஊக்கமளிக்கும் படி கேட்டுக் கொள்கிறோம்.
மறுபடியும் அடுத்த மத்தாப்பு மலரில் சந்திக்கும் வரை...

நன்றிகளுடன்
உமா - ஆசிரியர்

# நற் சிந்தனை

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று
குற்றங்களை மறந்து விடும் மனத்தால் ஒன்று

விளக்கம்

பிறர் செய்யும் தவறுகளை பிள்ளைகள் விரைவில் மறந்து விடுகிறார்கள். இப்படி அவர்கள் மறந்து விடுவது பிழை செய்பவர்களை கடவுள் மன்னிப்பதற்கு ஒப்பானது. அது மட்டுமல்ல குழந்தைகள் கள்ளங் கபடமில்லாதவர்கள். அதனால் ஆண்டவர் அவர்களது மனதில் குடியிருக்கின்றார். எனவே குழந்தைகளை கடவுளுக்கு சமமாக ஒப்பிடுகின்றார்கள்.

அப்பாவின் அன்புக் கவிதையொன்று...

## செல்வங்களே செல்வங்கள்...!


நீயிருப்பாய் முற்றத்தில் - சுமந்தவள்
தானிருப்பாள் பக்கத்தில் - துன்பங்கள்
பலம் தளரும்; சோர்வு பெறும் - ஓடிவிடும்
நீ கொடுக்கும் முத்தத்தில்!!



-புதுநகர் செல்லத்துரை

ஞானக்கதை

# இயற்கையின் நியதி



ஒரு பொழுது பாம்பொன்றின் தலையும் வாலும் யார் முன்னால் இருப்பது என்று சண்டை பிடித்தன. வால் தலையிடம் 'நீ எப்பொழுதும் முன்னே வழி நடத்துகின்றாய். அது நியாயமில்லை. சில சமயங்களில் என்னையும் முன்னே செல்ல விட வேண்டும்.' என்றது. தலையோ 'இயற்கையின் விதிப்படி நான் தான் தலைவன். என்னால் உன்னுடைய இடத்திற்கு வர முடியாது.' என்று பதிலளித்தது.

விவாதம் நீடித்து, ஒரு நாள் தலையை முன்னேற விடாமல், வால் மரமொன்றில் இறுகச் சுற்றிக் கொண்டது. முன்னேற எத்தனித்து தலை களைப்புற்றதும், வால் தான் போன போக்கில் வழி நடத்திச் சென்றது. இதனால் தீக் கிடங்கொன்றில் விழுந்து எரிந்து சாம்பலானது.

இந்த உலகில், எப்பொழுதும் எல்லாவற்றுக்கும் ஒரு ஒழுங்கும் அவற்றுக்கான செயற்பாடும் வகுக்கப் பட்டிருப்பது இயற்கையின் நியதி. அந்த ஒழுங்கு என்று மாற்றப்படுகிறதோ அன்று அவற்றின் செயற்பாடு தடைப்பட்டு, யாவும் அழிந்து விடும்.

(நன்றி: BUKKYO DENDO KYOKAI)

# சித்தார்த்தர்

இயற்கையின் நியதியை உலகுக்கு விளக்கியவர் கௌதம புத்தர்.

இந்தியாவில் கபிலவஸ்து என்னுமிடத்தில், சுத்தோதனன் என்னும் அரசனுக்கும் மாயாதேவி என்னும் அரசிக்கும் மகனாக சித்தார்த்தர் பிறந்தார். இவர் தனது ஏழாவது வயதில், வயலில் ஒரு குருவி புழு ஒன்றைப் பிடித்து உண்பதைக் கண்டு, 'உலகில் உள்ள உயிரினங்கள் எல்லாம் ஒன்றையொன்று கொலை செய்கின்றனவா?' என்று தனக்குத் தானே கேட்டுக் கவலையுற்றார். தாயை சிறு வயதில் இழந்த துன்பமும் அவரை மேலும் கவலையுறச் செய்தது.

பின்னர் அவர் யசோதரா என்னும் இளவரசியை மணந்து இன்பமாக வாழ்ந்தாலும், கவலைகள் நிறைந்த மனித வாழ்வினை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. இருபத்தொன்பதாவது வயதில் தன் அன்பு மனைவியையும் ஒரே மகன் ராகுலனையும் பிரிந்து தன் கேள்விகளுக்கு விடை தேடி வீட்டை விட்டு வெளியேறினார்.

அமைதியை நாடிப் பல இடங்கள் சென்று இறுதியில் தனது முப்பத்தைந்தாவது வயதில் ஞானமடைந்தார். அப்பொழுதிருந்து அவரை எல்லோரும் புத்தர் என்று அழைத்தார்கள். சுயநலம், வன்முறைகள், கொடுமைகள் இல்லாத தன்னம்பிக்கையுள்ள வாழ்வே ஒருவருக்கு அமைதியைத் தரும் என அவர் போதித்தார். உயிர்க் கொலையை வன்மையாகக் கண்டித்தார்.

'உயிர்களித்திடத்தில் நாம் அன்பு செலுத்துவோம்'

அக்கரை அழகில்...



நாங்கள் இலங்கை நாட்டைச் சேர்ந்தவர்கள். இலங்கை எமது தாய் நாடு என்றெல்லாம் சொல்லும் குழந்தைகளே! உங்களுக்கு இலங்கையின் அழகைப் பற்றி நாமும் கொஞ்சம் சொல்லுகின்றோம்.


இலங்கை ஒரு அழகான தீவு. அது இந்து சமுத்திரத்தில் இந்தியாவிலிருந்து ஏறத்தாழ 40 கிலோ மீற்றர் கடல் தூரத்தில் இருக்கிறது. இதனை இந்து சமுத்திரத்தின் முத்து என்று சொல்வார்கள்.






கொழும்பு இலங்கையின் தலை நகரமாகும். இதன் பழைய தலைநகரான அநுராதபுரம் இடிந்த பழைய சின்னங்களுடன் தொல் பொருள் ஆராய்ச்சியாளரைக் கவர்கிறது.

# இலங்கை



இலங்கையின் நடுப்பகுதியில் பச்சைப் பசேலென்ற தேயிலைச் செடிகள் நிறைந்த மலைகளும், நீர் வீழ்ச்சிகளும் கண்களுக்கு குளிர்மையூட்டுகின் றன.

தென்னை மரங்களுடன் அலைகள் வந்து விளையாடும் கடற்கரைகள் இலங்கையின் அழகைக் கூட்டுகின்றன.

சிகிரியாவின் ஓவியங்களும், சிவனொளிபாத மலையின் உயரமும், திருகோணமலை யின் இயற்கைத் துறைமுகமும், மட்டக்களப்பின் பாடும் மீன்களும் மட்டுமல்ல அதிசயமானவை.



யாழ்ப்பாணத்தின் உயர்ந்த பனை மரங்களும், ஈழத்தமிழரின் பண்பாடும் போற்றப்பட வேண்டியவை. இவற்றையெல்லாம் விரிவாக அடுத்து வரும் மத்தாப்பு இதழ்களில் படிக்கத் தவறாதீர்கள்.

இக்கரையில் ஒரு திருவிழா...

எம்மில் பலருக்குக் களியாட்டம் என்றதும் ஒரு திருவிழா, விநோத உடையலங்காரங்கள், முகமூடிகள் இவை தான் ஞாபகத்திற்கு வருகின்றன. இவற்றுக்கு மேலாக இக் களியாட்டங்களுக்கு ஒரு கதையும் உண்டு. விநோத உடையலங்காரம் பழைய கிரேக்க நாகரீகத்திலிருந்து ஏற்பட்டது. அந்தக் காலத்தில் இளைஞர்களிடையிலோ அல்லது ஒரு இடத்தின் விழாக்களிலோ மிகையாகக் காணப்பட்டது.

இவ் விழா வீபூதித் திருநாளுக்கு முதல் வரும் வாரத்தில் கொண்டாடப்படும் பண்டிகையாகும். களியாட்டம் என்றால் எல்லாவற்றையும் அத்துமீறி அநுபவிப்பது. அதனைத் தொடர்ந்து வரும் தபசு காலம் யாவற்றையும் ஒடுக்குவதாகும்.



# களியாட்டம் **(carnaval-carnival)**

இந்த இரண்டுக்கும் இடையில் உள்ள முரண்பாட்டை ஒரு பருமனான ஆணுக்கும் மெலிந்த பெண்ணுக்கும் நடக்கும் போராட்டத்தினால் எடுத்துக்காட்டினார்கள்.

இப்பொழுது இந்தக் களியாட்டம் பிரெஞ்சு நாடெங்கும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. பெரியவர்களும் சிறுவர்களும் முகமூடிகள் அணிந்தும் விநோத உடையணிந்தும் வலம் வருவார்கள்.

கல்லூரிகளில் முட்டைகள் எறிந்து மாவைத் தூவி முகங்களை மாற்றுவார்கள். விழா முடிவில் இந்த அத்துமீறிய செயல்களை ஒடுக்கி ஒழுங்கிற்கு வருவதை, களியாட்டப் பொம்மையை எரிப்பதன் மூலம் வெளிப்படுத்துகிறார்கள்.

இந்த வருடம் ஆசிய உடைகளை அணிந்து கொண்டாடுகின்றார்கள்.

அறிவுக் களஞ்சியம்

1. - செக்கனுக்கு 300 000 கிலோ மீற்றர் வேகத்தில் செல்வது எது?
2 - மிகவும் கடினமான கல் எது?
3 - மிகவும் நீண்ட மலைத் தொடர் எது?
4 - சான்ட்விச்சுக்கும் (Sandwich) புவெல் (குப்பைத் தொட்டி-Poubelle ) இற்கும் உள்ள ஒற்றுமை என்ன?

பஞ்ச தந்திரக் கதை வரிசையில்...

நரியும் கொக்கும் கதை, நன்னெறி சொல்லும் ஒரு குட்டிக் கதை. இக் கதை தமிழில் உள்ளது போல பிரெஞ்சிலும் உண்டு. இப்படி 260 கதைகளை, மூன்று பகுதிகளாக Jean de la Fontaine என்பவர் எழுதினார். இதே மாதியான கற்பனைக் கதைகளை, தமிழில் வீரமாமுனிவர், பஞ்ச தந்திரக் கதைகளாகத் தந்தார். இவர் ஒரு இத்தாலியப் பாதிரியார். தமிழ் மேல் கொண்ட பற்றினால் வீரமா முனிவர் எனத் தமிழ்ப் பெயரை வைத்துக் கொண்டார்.

## நரியும் கொக்கும்

ஒரு கொக்கும் நரியும் நண்பர்களானார்கள். ஒரு நாள் நரி, கொக்கை விருந்துக்கு அழைத்தது. கொக்கும் நரியின் வீட்டுக்குச்சென்றது. நரி நீராகாரத்தை தட்டில் வைத்துக் கொடுத்து விட்டுத் தன் பங்கை நக்கிச் சாப்பிட்டது. கொக்கின் நீண்ட அலகினால் தட்டில் உள்ளதை உண்ண முடியவில்லை. பேசாமல் வீடு திரும்பியது. நரி தன்னை அவமானப் படுத்தியதற்குப் பழிவாங்க எண்ணியது.



சில நாட்களின் பின் கொக்கு நரியைத் தன் வீட்டுக்கு விருந்திற்கு அழைத்தது. கொக்கு நரிக்கும் பிடித்த இறைச்சியுணவை நீண்ட கழுத்துள்ள ஒரு சாடியில் போட்டு நரியிடம் கொடுத்தது. நரியின் கழுத்து சாடியில் நுழையாததால் சாப்பிட முடியாமல் தவித்தது. கொக்கு தன் நீண்ட சொண்டை உள்ளே விட்டுச் சாப்பிட்டுக் காட்டியது. நரி வெட்கத்துடன் வீடு திரும்பியது.

'நாம் ஒருவருக்கு அவமதிப்பு செய்தால், அது நமக்கே திரும்பி வரலாம்' என்பதை இந்தக் கதை விளக்குகிறது.

சிறுவர் கற்பனையில்...

## நாற்காலியின் சுயசரிதை

எனது பெயர் நாற்காலி.
ஒரு மனிதன் என்னை உட்காருவதற்காகக் கண்டுபிடித்தார்.
எனக்கு நான்கு கால்கள் உண்டு.
நான் தற்பொழுது பல வடிவங்களில் இருக்கிறேன்.
நான் முன்பு மரங்களினாலும், பிரம்புகளினாலும் செய்யப்பட்டேன்.
அரசரும் பெரியோர்களும் என்மீது அமருவதனால், நான் பெருமையடைகின்றேன்.

-செல்வி அபிராமி தியாகராஜா


# வாயு இயக்க விதி

வாயு இயக்க விதி ஒரு பொருளைச் சுற்றிக் காற்று எப்படியெல்லாம் பரவுகிறது என்பதை ஆராயும் விஞ்ஞானமாகும்.

சுவிஸ் நாட்டைச் சேர்ந்த மருத்துவரும், கணிதவியலாளருமான டானியல் பேர்நுளி (Daniel BERNOULLI - 1700-1782) வாயுவின் வேகம் கூடும் போது அதனுடைய அமுக்கம் குறையும் என்பதைக் கண்டு பிடித்தார்.

இந்தத் தத்துவத்தின் படி, மேல் நோக்கிக் குவிந்தும், கீழ்ப் பரப்பு தட்டையானதுமான ஒரு பொருளை எடுத்துக் கொண்டால், இப்பொருளின் மேல் காற்று வீசும் போது கீழ்ப்பரப்பில் வாயுவின் அமுக்கம் மேல் பரப்பை விட அதிகமாக இருக்கும். இந்த அமுக்க வித்தியாசத்தினால் மேல் நோக்கி இந்தப் பொருளை தூக்கும் விசை உருவாக்கப் படுகிறது.

இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் தான் விமானங்கள் எம்மைச் சுமந்து ஆகாயத்தில் பறக்கின்றன.



செய்முறை விஞ்ஞானம்

விமானம் எப்படி மேலே எழும்புகிறது என்பதனை வீட்டில் பரிசோதனை செய்து பாருங்கள்

ஒரு மெல்லிய நாடாவை இரண்டு கைகளாலும் பிடித்த வண்ணம் அதன் மேற்பரப்பில் ஊதவும். நாடா மேல் நோக்கி எழும்புவதைக் காணலாம்.

விமானத்தின் செட்டைகளை அவதானித் திருப்பீர்கள். மேற்பக்கம் குவிந்தும் கீழ்ப்பக்கம் தட்டையாகவும் இருக்கும். தரையில் ஓடும் விமானத்தில் உராயும் காற்று செட்டையில் ஏற்படுத்தும் அமுக்க வித்தியாசத்தால் விமானம் தரையை விட்டுப் பறக்கிறது.

– குணம் மாமா



மத்தாப்புக்காக
தங்களுடைய ஆக்கங்கள்,
ஆலோசனைகள்
வரவேற்கப் படுகிறது.
தொலைபேசி:01.34.32.71.97

எழுதுங்கள்:
ஆசிரியர்– மத்தாப்பு
4, Rue de la Javeleuse
95490 - VAUREAL
FRANCE

எண்ணும் எழுத்தும்


கண்டு பிடியுங்கள்:

கீழே உள்ள எண்களில் எந்த எண் கேள்விக்குறி இருக்குமிடத்திற்குப் பொருத்தமானது எனக் கண்டு பிடியுங்கள்.
8, 2, 9, 1, 4, 6

| | | | |
|---|---|---|---|
| 3 | 5 | 1 | 9 |
| 2 | 0 | 4 | 6 |
| 7 | 1 | 0 | 8 |
| 2 | 3 | 1 | ? |


குறுக்கெழுத்து:

கீழே உள்ள பொருட்களின் பெயரை எழுதினால் புள்ளியிடப்பட்ட சதுரங்களில் காணப்படுவது உங்கள் கையில் இருப்பதாகும்.




பேசாதவை பேசுகின்றன


## தனித்துலாவும் துருவக் கரடி ( **Polar Bear-Ours blanc** )-வெண்பனி மேல் ஒரு பலசாலி



வெண்பனியில் தூர நின்று பார்த்தால் என்னைத் தெரியாது. என்னுடைய வெண்மையான அடர்ந்த உரோமம் தான் அதற்குக் காரணம். என் அருகே வந்து என் பருமனான பாதங்களைப் பார்த்துப் பயந்து விடாதீர்கள்! எனக்கு யாரையும் தாக்குவது பிடிக்காது. ஆனால் யாராவது என்னைத் தாக்க வந்தால்.... விடமாட்டேன்.



பனிக்காலத்தில் பனிக் குகையில் நான் பிறந்தேன். இளவேனிற் காலத்தில் வெளியே வந்தேன். ஆனாலும் குளிர் தான்! அம்மாவின் அரவணைப்பில் தூங்குவது போல் இன்பம் வேறு எதுவுமில்லை.




முதன் முதலில் குளிப்பதென்றால் பயம் தான். இப்பொழுதோ நன்றாக நீந்துவேன். குளிர் நீரின் அடியில் சென்று நல்ல மீன் பிடித்துச் சாப்பிடுவேன். என் அடர்த்தியான உரோமம், குளிரில் என்னை சூடாக வைத்திருப்பதோடு என் தோலை எப்போழுதும் காய்ந்த நிலையில் வைத்திருக்கிறது.



எனக்கு சிறந்த முகரும் திறனுண்டு. ஒரு மீற்றர் ஆழப் பனிப் படலத்தின் அடியில் இருக்கும் கடல் சிங்கத்தை (Phoque) மோப்பம் பிடித்து விடுவேன். தாய்க் கடல் சிங்கம் தன் குட்டிகள் மூச்செடுப்பதற்காகத் துவாரமிடும் நேரம் பார்த்து என் பாதங்களினால் நசித்துப் பிடித்து விடுவேன்.

எனக்குப் பெரிய வயிறு இருப்பதனால் தேவையான உணவைச் சேமித்து வைத்து குளிர் காலத்தில் சுகமாகக் குகைக்குள் தூங்குவேன்.

என்னைப்போன்ற என் நண்பர்களைக் கண்டால் இரண்டுகால்களிலும் எழுந்து நின்று வணக்கம் சொல்வேன். சிலவேளை விளையாட்டுக்காக குத்துச் சண்டையிடுவோம். நான் நல்ல பலசாலி. இலகுவில் களைக்க மாட்டேன். குளிப்பு, சாப்பாடு, விளையாட்டின் பின் வெய்யிலில் ஒரு குட்டித் தூக்கம் போடுவேன்.



என் நாடான தூய வெண்பனி மேல் தனித்து உலாவுவதே ஒரு தனி சுகம். வாழ்க்கை எவ்வளவு அற்புதமானது.....

தொகுப்பு: மைனா

அறிவுக் களஞ்சிய விடைகள்:
1 - ஒளி
2 - மிகவும் கடினமான கல் வைரம். இது தூய்மையான காபன்.
3 - அன்டஸ். 8000 கிலோ மீற்றர் நீளமான இந்த மலைத் தொடர் தென் அமெரிக்காவில் உள்ளது.
4 - SANDWICH உம் POUBELLE உம் இரு மனிதர்களின் பெயர்கள். சான்ட்விச் ஒரு அரசன். அவன் மந்திரி சாப்பிட்டவண்ணம் தொடர்ந்து சீட்டாடுவதற்காக இந்த உணவைக் கண்டு பிடித்தார். புவெல் பரீஸ் மாநகர சபை நிர்வாகி. நகரத்தை சுத்தமாக வைத்திருப்பதற்கு பொறுப்பாக இருந்தவர்.
கண்டுபிடியுங்கள் விடை: 6
குறுக்கெழுத்து விடைகள்: 1-தென்னைமரம், 2-புத்தகம், 3-தாமரை, 4-கப்பல், 5-கறுப்பு, புள்ளியிட்ட சதுரங்களில் இருப்பது -மத்தாப்பு


பட்டுமாமியின் குட்டிக்கதை

# மயிலும் கொக்கும்

மயில் ஒன்று தன்னைப் பற்றி வீணாகப் பெருமைப் பட்டது. எப்பொழுதும் மற்றப் பறவைகளிடம், தன் அழகான தோகையைப் புகழ்ந்து கூறியது. மழை வருமுன் தன் தோகையை விரித்து, ‘என் தோகையைப் பாருங்கள். அதிலுள்ள நிறங்களைப் பாருங்கள். நான் தான் பறவைகளிலேயே அழகானவள்’ என்றது.

தன் தோகையை முற்றாக விரித்து தன்னை யாராவது பார்க்க வர வேண்டும் என்பது போல் நின்றது. மற்றப் பறவைகளோ அதன் தற்புகழ்ச்சியைக் கேட்டு சலிப்படைந்து, எப்படி அதன் வாயை மூடுவதென்று தெரியாமல் இருந்தன.





அப்பொழுது கொக்கு ஒன்று 'அதனை என்னிடம் விட்டுவிடுங்கள் நான் பார்த்துக் கொள்கிறேன். அந்தப் பெருமை பிடித்த மயிலை முட்டாளாக்குகிறேன்' என்றது.

ஒரு நாள் காலை மயிலிடம் கொக்கு சென்றது. மயிலும் வழமை போல் தன் தோகையை விரித்து 'என் தோகையின் அழகைப்பார்! ஏன் உன் சிறகுகள் அழகில்லாமல் இருக்கின்றன? கொஞ்சம் உன்னை அழகுபடுத்தக் கூடாதா?' என்று கேட்டது.


கொக்கோ 'உன் தோகைகள் அழகாக இருக்கலாம். ஆனால் உன்னால் உயரப் பறக்க முடியவில்லையே! ஏன்? உன் அழகிய தோகைகளுக்கு உன்னை உயரத் தூக்கிச் செல்ல வலுவில்லை. பார் என் சிறகுகளை! என்னை எப்படி உயரக்கொண்டு செல்கின்றன' என்று கூறி வலுவான தன் சிறகுகளை விரித்து விறுக்கென்று வானில் உயரப் பறந்தது.

அறிவுக்கு....

நாம் எம்மிடம் இருப்பதைக் கூறி தற்பெருமை கொள்ளக் கூடாது. எம்மிடம் இல்லாதது ஒன்று மற்றவர்களிடம் இருக்கக் கூடும். அது போல எம்மிடம் ஒன்றில்லை என்று கவலைப் படக் கூடாது. நாம் ஒன்றை இழப்பின் இன்னொன்றை அடையப் பெறுவோம்.


*சித்திரமே! சித்திரமே!*

சென்ற முறை பன்றி வரைவது எப்படி எனறு பார்த்தோம். இம் முறை இன்னுமொரு மிருகத்தை இலகுவாக வரையக் கற்றுக் கொள்வோம். அது என்ன தெரியுமா? கம்பளி ஆடு தான்.




மேற் காட்டியபடி மூன்று வட்டங்களைக் கீறிக் கொள்ளுங்கள். நான்கு கால்களுக்குப் பதிலாக நான்கு கோடுகளையும் போட்டுக் கொள்ளுங்கள்.


கம்பளித் தோலைக் காட்ட சுற்றிவர பற்களை வரையுங்கள். காதுகளையும், வாயையும், மூக்கையும் வரைந்த பின்னர் கண்ணுக்கு ஒரு வட்டம் கீறி, அரைத் தூக்கத்தில் இருப்பது போல் ஒரு கோடு போடவும். கால்களைக் கருமை நிறத்தினால் இரண்டாவது படத்தில் உள்ளது போல் தடிப்பாக்கிக் கொள்ளவும். பளபளப்பைக் காட்ட சற்று நீல வண்ணம் தீட்டவும்.



ஆட்டுக் குட்டிகளைக் கீறும் போது ஆடு கீறுவது போலவே கீறி கால்களையும் தலையையும் சற்று விலத்திக் கீறவும். அத்துடன் கம்பளித் தன்மையைக் காட்ட பற்களை வரையவும்.

*சிறுவிரல் சித்திரங்கள்*



ஆடுவோம் விளையாடுவோம்


# ஆடு புலி ஆட்டம்


குளிர் காலம் என்றாலே எமக்கு வீட்டுக்குள்ளே இருக்கத் தோன்றும். வீட்டுக்குள்ளே விளையாடுவதற்கு நிறைய விளையாட்டுக்கள் உண்டு. ஆனால் செலவின்றி விளையாட இதோ ஒரு விளையாட்டு!

ஈழத்தில் சிறுவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் விளையாடும் விளையாட்டுத் தான் ஆடும் புலியும்.
இரண்டு பேராக விளையாடும் இந்த விளையாட்டில் ஒருவர் ஆடுகளின் பக்கத்திற்காகவும், மற்றவர் புலிகளின் பக்கத்திற்காகவும் விளையாடுவார்கள்.

விளையாடும் முறை:

ஒரு பேப்பரில் கீழே காட்டியவாறு கோடுகளைக் கீறிக் கொள்ளுங்கள். மூன்று புலிகளையும், எட்டு ஆடுகளையும் குறிக்கும் முகமாக இரண்டு வேறு நிறங்களில் காய்களையோ, போத்தல் மூடிகளையோ வைத்துக் கொள்ளலாம். கோடுகள் சந்திக்கும் இடங்கள் அவற்றின் நிலையங்களாகும்.







இரண்டாவது படத்தில் காட்டியிருப்பது ஆடுகளினதும், புலிகளினதும் ஆரம்ப நிலையாகும். அருகேயுள்ள எந்த வெற்றிடத்திற்கும் ஆடோ, புலியோ நகர்த்தப் படலாம். புலி ஒரு ஆட்டைக் கடந்து அடுத்த இடம் வெற்றிடமாயின் அந்த இடத்தை அடையலாம். அப்போது கடக்கப்பட்ட அந்த ஆடு விளையாட்டிலிருந்து நீக்கப்படும். ஆனால் ஆடு அப்படிக் கடக்க முடியாது.

புலி ஆட்டைக் கடந்து பாயாதவாறு ஆடுகளை நகர்த்த வேண்டும்.

விளையாட்டின் குறிக்கோள் புலிகளை நகர விடாமல் ஆடுகள் சுற்றி வளைத்துப் பிடிப்பதேயாகும். புலிகள் நகர முடியாமல் போகும் போது ஆடுகளுக்கு வெற்றியாகும். வியைாட்டைத் தொடங்குபவர் ஆட்டின் பக்கம் விளையாடுபவர்தான்.

எங்கே மூளைக்கு கொஞ்சம் வேலை கொடுத்துப் பாருங்கள்.



புலிகளினால் நகரமுடியாத நிலைகளுக்கு உதாரணங்கள்

## மத்தாப்பு சஞ்சிகைக்கான சந்தா விபரம்

ஒரு வருட சந்தா 100 பிரங்குகள் மட்டுமே.

ஆறுமாதத்திற்கான சந்தா 55 பிராங்குகள்.

விபரங்கட்கு:

ஆசிரியர் - மத்தாப்பு
4, Rue de la Javeleuse
95490 - VAUREAL
FRANCE
Tel: 01.34.32.71.97

# JRN Consultant



. சகல விதமான கட்டிட ஆலோசனைகள்
. வங்கிக் கடன்கள்
. காப்புறுதி, நஷ்ட ஈடு, விலை மதிப்பீடு
. மொழி பெயர்ப்பு சேவைகள்

தொலை பேசி இலக்கம்: 01.34.32.71.97– 06.08.93.54.68